தமிழ்வழி பரீட்சைகள்

# இரண்டாம் தவணைப் பரீட்சை

தரம் 08

**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II**
**Tamil Language and Literature I, II**

**Two hours**
**இரண்டு மணித்தியாலங்கள்**

A/L Geography ACCOUNTING WORLD 2 ஆம் குறுக்கு வீதி, மல்லாவி
இனிது கல்வி நிலையம் பாலிநகர், வவுனிக்குளம்
Personal & Group Class 6-11 - TAMIL A/L - GEOGRAPHY

தமிழ்வழி கற்றலுக்கான ஒளி

## தமிழ் மொழியும் இலக்கியமும் I

பரீட்சைத் தொடர் Examination Series 4

**கவனிக்க:**
* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாளுக்குரிய **புள்ளிகள்** 100 ஆகும்.
* 1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.
* அறிவுறுத்தல்களுக்கு அமைவாக பகுதி II இலுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக. ..........................................

- **பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. "மூத்தவன் இழவு வீட்டைப் பார்த்ததுகூட இல்லை" – இங்கு **இழவு** என்பதற்கு நிகரான சொல்.
   1. சாவு 2. ஜனனம் 3. பிறப்பு 4. வாழ்வு

2. "இராமன் ஆரணியம் நோக்கி புறப்படலானான்" – இங்கு **ஆரணியம்** என்பதன் எதிர்ச்சொல்.
   1. வனம் 2. காடு 3. நாடு 4. அடவி

3. "தோழிக் கிளிகள் சூழ வந்து
   தோழி யுன்னைப் போற்றுவேன்" – இங்கு **தோழி** என்பதன் எதிர்ப்பாற்சொல்.
   1. நண்பி 2. எதிரி 3. தோழன் 4. நண்பன்

4. "இந்த அரசாட்சியின் நிலையை எண்ணும்போது எள்ளல் தோன்றுகின்றது" – இங்கு **எள்ளல்** என்பதன் ஒத்தசொல்.
   1. உண்மை 2. அருவருப்பு 3. வியப்பு 4. இகழ்ச்சி

5. "இந்த நாட்டுக்கு விடுதலை கிடைக்குமா?" – இங்கு **விடுதலை** என்பதன் ஒத்த சொல்.
   1. யுத்தம் 2. போர் 3. சுதந்திரம் 4. அமர்

6. பனையின் இளையது நுங்கு என்பது போல **வாழை**யின் இளையது.
   1. வடு 2. மூசு 3. குரும்பை 4. கச்சல்

7. "விஞ்ஞான ஆய்வுகூடத்தில் மைக்ரோஸ்கோப் காணப்பட்டது" – இங்கு **மைக்ரோஸ்கோப்** *(Misroscope)* எனக் குறிப்பிடப்படுவது எதனையாகும்?
   1. ஒலிவாங்கி 2. நுணுக்குக்காட்டி 3. தொலைநோக்கி 4. தளவாடி

8. **உயிர்மெய் எழுத்து**க்களின் எண்ணிக்கை.
   1. 12 2. 247 3. 30 4. 216

9. **"நாடகமே உலகம்"** எனும் கட்டுரையை எழுதியவர்
   1. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை 2. சுப்பிரமணிய பாரதியார்
   3. மு. வரதராசன் 4. த. கலாமணி

**10.** **உளை, உழை** என்பவற்றின் பொருள்கள் **முறையே.**

1. சேறு, மான்
2. இடம், சேறு
3. உழைத்தல், வருந்து
4. உலைதல், சேறு

**11.** நல்ல பழங்களாகத் தாருங்கள் – இங்கு **நல்ல** என்பது

1. பெயரடைமொழி
2. வினைச்சொல்
3. காரணப் பெயர்
4. வினையடைமொழி

**12.** பின்வருனவனவற்றுள் **தனிக்குறில்** எழுத்து.

1. க
2. ஆ
3. இ
4. ஐ

**13.** "கூலிக்கு வேலை செய்தான்" – இங்கு **'கு'** உருபு பெற்றுவந்த பொருள்.

1. முதற்காரணம்
2. கொடை
3. உறவு
4. நிமித்தகாரணம்

**14.** பின்வருனவற்றுள் குறிப்புவினையாக **அமைவது.**

1. வந்தான்
2. கரியன்
3. வரைந்தார்
4. பறந்தது

**15.** பின்வருவனவற்றுள் பிரெஞ்சு மொழிச் சொல்லாக **அமைவது**

1. பீரோ
2. இலாகா
3. அட்டிகை
4. இடாப்பு

**16.** "எனக்கு தோசையை விட இடியப்பமே அதிகமாகப் பிடிக்கும்" – இங்கு இடம்பெற்றுள்ள ஐந்தாம் வேற்றுமையின் **சொல்லுருபு.**

1. விட
2. பிடிக்கும்
3. ஐ
4. தோசை

**17.** பின்வருவனவற்றுள் கிரந்த எழுத்தாக **அமையாதது.**

1. ஞா
2. ஸ்ரீ
3. ஹ
4. ஸ்

**18.** **மீன்கொத்தி** – என்பது.

1. இடுகுறிப்பெயர்
2. காரணப்பெயர்
3. தொழிற்பெயர்
4. காரணவிடுகுறிப்பெயர்

**19.** "**பறவைகளின் இசைவாக்கம்**" என்ற கட்டுரையின் **ஆசிரியர்**.

1. பேராசிரியர் சி. தில்லைநாதன்
2. அ. ச. ஞானசம்பந்தன்
3. க. சச்சிதானந்தன்
4. கு. அழகிரிசாமி

**20. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.**

(அ) மனித விழுமியங்கள் சேர்க்கப்படாத அறிவு பயனற்றது.
(ஆ) அது அறவியல் சார்ந்தது.
(இ) அதாவது அறப்பண்புகளின் அடிப்படையில் எழுகின்ற மனித விழுமியங்கள் சார்ந்தது.
(ஈ) அறிவுக்கு இன்னொரு பக்கமும் உண்டென்பதையும் உணர்ந்துகொள்ளல் வேண்டும்.
(உ) அறிவியல் என்பது அறிவு என்னும் நாணயத்தின் ஒரு பக்கம் மட்டுமே.

1. அ, இ, ஆ, உ, ஈ
2. உ, ஈ, ஆ, இ, அ
3. ஈ, ஆ, உ, இ, அ
4. உ, இ, ஆ, அ, ஈ

**(20 X 2 = 40 புள்ளிகள்)**

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

**01. வகுப்பறையில் நீர் மேற்கொண்ட பேச்சுக் கணிப்பீட்டை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

(அ) பேச்சுக் கணிப்பீட்டிற்காக உமக்கு வழங்கப்பட்ட **தலைப்பு** யாது? (2 புள்ளிகள்)

(ஆ) பேச்சுக் கணிப்பீட்டிற்கான தகவல்களை நீர் எவ்விதம் திரட்டிக்கொண்டீர்? (3 புள்ளிகள்)

(ஈ) மேற்படி பேச்சுக் கணிப்பீட்டிற்காக ஆசிரியர் முன்வைத்த நியதிகள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)

(உ) கணிப்பீடுகளை மேற்கொள்வதால் மாணவர்கள் அடையக்கூடிய நன்மைகள் எவை? (3 புள்ளிகள்)

**(10 புள்ளிகள்)**

**02. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

(அ) இயற்கையைப் பேணுவோம்

(ஆ) வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்

(இ) கண்டோர் வியக்கும் மலையகம்

(ஈ) மழையில் நனைந்த புத்தகம் தன்கதை கூறல் **(15 புள்ளிகள்)**

**03. பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து ஏறக்குறைய 75 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

நீங்கள் வாசிப்பதற்கு அவசியமான புத்தகம் ஒன்றைப்பற்றி கூறி, அதனை வாங்கி அனுப்புமாறு கேட்டு உங்கள் உறவினர் ஒருவருக்கு ஒரு **கடிதம்**

**அல்லது**

எதிர்பாராத விபத்து ஒன்றின் போது தனது தந்தையை இழந்த உமது நண்பன் **அல்லது** நண்பிக்கு அனுதாபம் தெரிவித்தும் ஆறுதல் தெரிவித்தும் ஒரு **கடிதம்** **(10 புள்ளிகள்)**

**04. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

1) பேராசிரியர் ம.மு. உவைஸ் அவர்களின் பங்களிப்புடன் இலக்கிய மாநாடுகள் நடைபெற்ற இடங்கள் **இரண்டு** தருக.

2) கட்புலனைப் பொறுத்தவரை பறவைகள் பெற்றுள்ள **உயர்வான இசைவாக்கம்** எத்தகையது?

3) "நூல்களை ஒருவர் விரும்பி வாசிக்க வேண்டும். வாசிக்குமாறு ஒருபோதும் வற்புறுத்தக் கூடாது" – எனக் கூறப்படுவதற்கான **காரணம்** யாது?

4) கட்டுரையொன்றின் பிரதான **உறுப்புகள்** யாவை?

5) இராபர்ட் புரூஸ் சிலந்திப் பூச்சியிடம் கற்றுக்கொண்ட **படிப்பினை** யாது**?**

6) கம்பரால் இயற்றப்பட்ட **மகா காவியம்** யாது? அதில் **அதிக** பாடல்களைப் பெற்றவர் யார்?

7) யானைத் தீ எனும் கொடும் பசியால் துன்புற்றவர் யார்?

8) அடைமொழி என்றால் என்ன?

9) "மன்னன் இல்லாமல் இந்த நாடு இருக்கக் கூடாது; ஆதலால் நீ மன்னனாக ஆவாயாக" – இக்கூற்று யாரால் யாருக்கு உரைக்கப்பட்டதாகும்?

10) எந்த அரசாட்சி தங்கள் நாட்டில் நிலவக்கூடாது என ஸ்கொட்லாந்து மக்கள் விரும்பினார்கள்?

**(20 புள்ளிகள்)**

**05. வழு நீக்கி எழுதுக.**

கண்நீர் ஆறாகப் பெருக பரதன் நிற்கின்ற கோலத்தில், பக்கத்தில் சென்று, தொளுது நிற்கின்றான் மூவறுக்கும் பின் உள்ளவனாகிய நாலாமவன். உடனே தனது மார்போடு சேர்த்து இருகத் தழுவிக் கொன்டான் பரதன். **(05 புள்ளிகள்)**

* * *

- பயிற்சியே பரீட்சையின் படிக்கல் -